பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

07 12 2024 **SATURDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. காசநோய் பாதிப்பு மற்றும் அந்நோயால் ஏற்படும் இறப்புகளை குறைப்பது தொடர்பான 100 நாள் தீவிர பிரச்சார இயக்கத்தை மத்திய அரசு இன்று தொடங்குகிறது.
2. இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
3. ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் மத்தியக்குழுவினர் இன்றும், நாளையும் பார்வையிடவுள்ளனர்.
4. பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது அனைத்துத்துறை அலுவலர்களும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.
5. ஆசிய இளையோர் மகளிர் ஹாக்கிப்போட்டி இன்று ஓமன் தலைநகர் மஸ்கட்டில் தொடங்குகிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

நாடு முழுவதும் காசநோய் பாதிப்பு மற்றும் அந்நோயால் ஏற்படும் இறப்புகளை குறைப்பது தொடர்பான 100 நாள் தீவிர பிரச்சார இயக்கத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா, ஹரியானாவில் இன்று தொடங்கிவைக்கிறார்.

33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 347 மாவட்டங்களில் இந்த பிரச்சார இயக்கம் தீவிரமாக நடைபெறவுள்ளது.

100 நாள் பிரச்சார இயக்கத்தில் காசநோய் பாதிப்பு குறித்த விவரங்கள், நோய் அறிதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரிவான சிகிச்சை வசதி, இறப்பு விகிதங்களை குறைத்தல் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது.

காசநோய் எளிதில் தாக்கக்கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு உரிய சிகிச்சைக்கான வசதியை ஏற்படுத்துவதோடு விரிவான ஊட்டச்சத்து ஆதரவை வழங்குவதும் இந்த இயக்கத்தின் முக்கிய அம்சமாகும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு மத்திய அரசு தொள்ளாயிரத்து 44 கோடியே 80 லட்சம் ரூபாயை நேற்று விடுவித்தது.

இதனை சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு அமித் ஷா, சவாலான சூழ்நிலையில், தமிழகத்தில் உள்ள சகோதர, சகோதரிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு ஆதரவு கரம் நீட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

ஃபெஞ்சல் புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சரி செய்ய தமிழகத்திற்கு 6 ஆயிரத்து 675 கோடி ரூபாயை வழங்க மத்தியக்குழு பரிந்துரைக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் ஆய்வு செய்ய தமிழகம் வந்துள்ள மத்தியக்குழுவினர் நேற்று தலைமைச்செயலகத்தில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினர்.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் பேரிடர் மேலாண்மை இணைச்செயலாளர் திரு ராஜேஷ் குப்தா தலைமையிலான குழுவினரிடம் இதுதொடர்பாக முதலமைச்சர் கோரிக்கை மனு ஒன்றை வழங்கினார்.

பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தற்காலிக மற்றும் நிரந்தர சீரமைப்புப்பணிகளை மேற்கொள்ள 6 ஆயிரத்து 675 கோடி ரூபாயை வழங்க வேண்டும் என்று அவர் கூறினார்.

மாநிலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள நிவாரணப்பணிகள் மற்றும் சீரமைப்புப்பணிகளுக்கு இந்த நிதியினை விரைந்து பெற்றுத்தர மத்தியக்குழு பரிந்துரைக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், மத்தியக்குழுவினர் புயலால் பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களை இன்றும், நாளையும் ஆய்வு செய்ய உள்ளனர்.

<<<<<<>>>>>

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்தில் அடுத்த சில நாட்களுக்குள் மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் முழுமையாக வழங்கப்பட்டுவிடும் என்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை முதன்மைச்செயலர் திருமதி அமுதா தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட உள்ள நிவாரணப் பொருட்களை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(வாய்ஸ் பைட் - அமுதா – 47 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது அனைத்துத்துறை அலுவலர்களும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற ஆய்வுக்கூடத்தின்போது இதனை தெரிவித்த அவர், மக்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தினாலும், அத்திட்டங்களின் பலன் முழுமையாக பொதுமக்களை சென்று சேருவதை உறுதிபடுத்துவது அரசு அலுவலர்களின் கடமை என்று கூறினார்.

முன்னதாக, மக்களுடன் முதல்வர் திட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டதற்காக வேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தை பாராட்டி சான்றிதழ் மற்றும் கேடயங்களை துணை முதலமைச்சர் வழங்கினார்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பொதுத்தேர்வில் அதிக தேர்ச்சி விகிதத்தை அளித்த பள்ளிகளுக்கும் அவர் கேடயங்களை வழங்கி பாராட்டினார்.

<<<<<<>>>>>

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் கோவில் மலையில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளித்த பின்னரே, தீபத் திருவிழாவின்போது பக்தர்கள் மலை மீது ஏற அனுமதி உண்டா, இல்லையா என்பது முடிவு செய்யப்படும் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் நேற்று கார்த்திகை தீபத் திருவிழா முன்னேற்பாடுகள் குறித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு மற்றும் உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தாண்டு கார்த்திகை தீபத்திருவிழா எந்தவித இடர்பாடுகளும் இல்லாமல் சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

இந்த ஆண்டு பாஸ் வழங்குவது கடுமையாக்கப்பட்டுள்ளது என்றும், பாஸ் இல்லாமல் யாரும் தீபத்திருவிழாவின் போது ஆலயத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் திரு எ வ வேலு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கொடைக்கானல் பிரையன்ட் பூங்காவில் கோடை காலத்தில் நடைபெறவுள்ள 62-ஆவது மலர் கண்காட்சிக்கு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், முதல்கட்டமாக 30 ஆயிரம் மலர் கன்றுகளை நடும் பணி தொடங்கியுள்ளது.

சால்வியா, அல்ஸ்ட்ரோமரியா, வெர்பினா, டெலிபீனியம் உள்ளிட்ட 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரியவகை மரக்கன்றுகள், மலர் படுகையில் நடப்பட்டு வருகினறன.

இந்த நாற்றுகள் செடியாகி வரும் ஏப்ரல் மே மாதங்களில் பூத்துக்குலுங்கும்போது சுற்றுலாப்பயணிகளை வெகுவாக ஈர்க்கும் என்று தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரத்தில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி இன்று உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

*இருவரிச் செய்திகள்*

உக்ரைன் மீது தொடர்ச்சியாக ரஷ்யா நடத்திவரும் தாக்குதலுக்கு அந்நாட்டு அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

-------------

வடமேற்கு சிரியாவில் அரசு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் மோதல் தீவிரமாகியுள்ளதால், 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

-------------

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா விரைவில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, தற்காலிக மருத்துவமனைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

-------------------

மத்திய அமலாக்கத்துறையினர் நேற்று மும்பை, அகமதாபாத் உள்ளிட்ட ஏழு இடங்களில் நடத்திய திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத 13 கோடியே 50 லட்சம் ரூபாயை பறிமுதல் செய்தனர்.

---------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் மூங்கில்துறைப்பட்டு பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100-க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அஇஅதிமுக சார்பில் நிவாரணப்பொருட்களை அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி நேற்று வழங்கினார்.

-------------

காஞ்சிபுரம் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப்பணியாளர்கள் 90 பேருக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் நேற்று வழங்கினார்.

-------------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், ஃபெஞ்சல் புயல் வெள்ள நிவாரணத்திற்கான கணக்கெடுக்கும் பணி நடைபெற இருப்பதால் வரும் திங்கட்கிழமை நடைபெறவிருந்த மக்கள் குறைதீர்நாள் கூட்டம் ரத்து செய்யப்படுவதாக மாவட்ட ஆட்சியர் திரு பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் மணிமுத்தா அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் மகளிர் ஹாக்கிப்போட்டி இன்று ஓமன் தலைநகர் மஸ்கட்டில் தொடங்குகிறது.

அடுத்த ஆண்டு சிலியில் நடைபெறவுள்ள இளையோர் உலகக்கோப்பை ஹாக்கிப்போட்டிக்கான தகுதி ஆட்டமாக இப்போட்டி இருக்கும்.

இந்த போட்டியின் "ஏ" பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி, சீனா, மலேசியா, தாய்லாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகளை எதிர்த்து விளையாடவுள்ளது.

"பி" பிரிவில் தென்கொரியா, ஜப்பான், தைவான், ஹாங்காங், இலங்கை ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

நாளை நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

--------------

இந்தியாவுக்கு எதிரான அடிலெய்டு கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 86 ரன்களுடன் இன்று தொடர்ந்து விளையாடவுள்ளது.

இப்போட்டியில் ஆஸ்திரேலியா, இந்தியாவை விட 94 ரன்கள் பின்தங்கியுள்ளது.

<<<<<<END>>>>>